மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்
கிடைக்கப்பெற்றது
04 ... 1997
05 SEP 1997

Registered As Catholic Weekly

# பாதுகாவலன்

PATHUKAVALAN

**யூபிலி 2000 "நிலை ஆய்வு" வினாக்கொத்து நிரப்பி அனுப்பி விட்டீர்கள் தானே!!!**

யூபிலி ஆண்டில் முதற் கட்ட செயற்பாடுகளை மீளாய்வு செய்ய ஆயரின் வேண்டுகோளுக்கிணங்க "நிலை ஆய்வு" வினாக்கொத்து பங்குகளுக்கு அனுப்பப்பட்டது. நிரப்பிய வினாக்கொத்துகளை அனுப்ப வேண்டிய இறுதிநாள் 31.8.97. இது ஒரு ஞாபகமூட்டல் மட்டும் தான் அனுப்பி விட்டீர்களா இல்லையா?

இலங்கையின் முதல் கத்தோலிக்க தமிழ் வார ஏடு மலர் 123 இதழ் 9 15 ஆகஸ்ட் — 15 செப்ரெம்பர் 1997

## "வன்னியில் உணவின்மையால் சிலர் தற்கொலை கூட செய்ய முயன்றுள்ளனர்" ஆயர் மன்றத்தில் யாழ் ஆயர்

ஆயர் பேரவை ஆவணி 6–8 திகதிவரை கூடியபோது வன்னி நிலைமைகளைப் பற்றி யாழ் மன்னார் ஆயர்கள் தெளிவான விளக்கம் கொடுத்தனர். அப்போதே யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை "வன்னி நிலை மிகமோசமாக உள்ளது. அரச உலர் உணவு நிறுத்தப்பட்டுள்ளது. பாதை மூடப்பட்டமையால் உணவு, மருந்து தட்டுப்பாடு நிலவுகிறது. வன்னியில் உணவின்மையால் சிலர் தற்கொலை கூட செய்ய முயன்றுள்ளனர். போக்குவரத்துத் தடங்கலினால் மருந்து வகைகள் காலாவதியாகி வந்து சேருகின்றன. வறட்சிக் காலம் என்றபடியால் குடிநீர் பற்றாக்குறை நிலவுகிறது. சொறி, சிரங்கு, மலேரியா போன்ற வருத்தங்களும் பரவி வருகின்றன. மாங்குளம், வவுனிக்குளம் பகுதிகளில் செல்களும், விமானத் தாக்குதல்களும் இடம் பெறுகின்றன. வவுனிக்குள ஆலயத்திற்கு சமீபமாக மனிதமுன்னேற்ற நிலையம் அமைத்துக் கொடுத்த வீடுகள் மீது விமானத்தாக்குதல் நடத்தப்பட்டபடியால் ஒன்பது பேர் இறந்து, 20 பேர் காயமுற்றுள்ளனர்" என்றார். இதனைச் செவிமடுத்த ஆயர் மன்றம் ஜெயசிக்குரு ராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும்படியும் உணவு, மருந்து வகைகளை வன்னி நகருக்கு அனுப்பும்படியும் விண்ணப்பம் ஒன்றை அரசிற்கு அனுப்பியது.

## புதிய அரசியல் அமைப்பின் 2ஆம் அதிகாரத்திற்கு ஆயர் சங்கத்தினர் பலத்த எதிர்ப்புத் தெரிவிப்பு

இலங்கை ஆயர் பேரவை கடந்த ஆவணி 97இல் கூடிய போது புதிய அரசியல் அமைப்பின் 2வது அதிகாரத்தில் புத்த சமயத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள முதன்மையான சலுகைகள் பற்றி விரிவாக ஆராய்ந்து இது எவ்விதம் மற்ற சமயங்களைப் பாதிக்கிறது என்பதை விவாதித்து தமது எதிர்ப்பை கத்தோலிக்க மக்கள் முறையாகத் தெரிவிக்க வேண்டுமென்று தெரிவித்தனர்.

புதிய அரசியல் அமைப்பின் 2வது அதிகாரத்தில் 1) புத்த சமயம் இலங்கையின் அரச மதமாக இருக்கும் 2) கொள்கைகள் தயாரிக்கும்போது புத்த சங்கத்தின் கருத்து கவனத்தில் எடுக்கப்படும் என்ற இருவிடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசியல் அமைப்பிலேயே பிரிவினையைக் கொண்டு வருகின்ற இவ்விடயங்கள் நீக்கப்பட்டு மத சார்பற்ற அரசியல் கொள்கையை இலங்கை வகிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# இழந்த ஒரு உயிருக்கும் எவ்வித இழப்பீடும் ஈடு கொடுக்க முடியாது

— யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக் குழு

சர்வதேச மன்னிப்புச் சபையின் லண்டன் தலைமையகத்திலிருந்து அண்மையில் யாழ் விஜயம் செய்த செல்வி இன்கிறிட் மாஸாஜெ, திரு. டேவிற் ஆகியோரை யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக்குழு 17.08.97 இல் சந்தித்து பின்வரும் கருத்துக்களை முன்வைத்தது. யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக்குழுவின் தலைவர் அருள்திரு A. I பேர்ணாட் அடிகள் குழுவின் சார்பில் காவலனுக்கு கருத்து வெளியிடும் போது "இழந்த ஒரு உயிருக்கும் எவ்வித இழப்பீடும் ஈடு கொடுக்க முடியாது" என்றார். அவர்களின் முழு அறிக்கை தொடர்கிறது.

எமது மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கும் போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் சித்திரவதை, கற்பழித்தல், சட்டத்திற்கு புறம்பாக கைதுசெய்தல் போன்ற பலவிதமான மனித உரிமை மீறல்களும் இடம் பெற்றுள்ளன.

95ம் ஆண்டில் இறுதிப்பகுதியில் வலிகாமத்தில் இடம் பெற்ற "புலம் பெயர்வின்" பின். மக்கள், 96ம் ஆண்டு ஏப்ரில் மாதம் மீளத்திரும்பத் தொடங்கினர். ஆடி மாதம் பிற்பகுதி தொடக்கம் படையினரின் பயங்கரம் தலை விரித்தாடியது. வீட்டிலிருந்து ஒருவர் வெளியே சென்றால், திரும்பிவரும்வரை அவருக்கும் வீட்டாருக்கும் ஏக்கம்.

கடந்த நான்கு, ஐந்து மாதங்களாக குடாநாட்டில் (தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

**50க்கு அதிக குருக்கள் - அருள்சகோதரர்கள்! பல கன்னியர்கள்! மடுப்பதி நிறைந்த மக்கள் வெள்ளம்!**

# மடுப்பதியில் மூவருக்குக் குருப்பட்டம் 4-8-1997



அருள் சகோதரர், அகஸ்ரீன் இரணைப்பாலை மாத்தளன் அடைக்கல அன்னை ஆலய பங்கைச் சேர்ந்த காலம் சென்ற திரு. அந்தோனிப்பிள்ளை காலம்சென்ற திருமதி அந்தோனிப்பிள்ளை ஆஞ்சலீனம்மா தம்பதிகளின் புதல்வராவர்.

இவர் இரணைப்பாலை றோ. க. த. க. பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும், புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் உயர் கல்வியையும் பெற்றார்.

புனித மாட்டீனார் குருமடத்தில் ஆரம்ப குருத்துவ பயிற்சியைப் பெற்று கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலையும், இறையியலையும் கற்றார்.



அருள்சகோதரர், யூட் நிக்ஷன் இளவாலை புனித யாகப்பர் ஆலயப்பங்கைச் சேர்ந்த காலம் சென்ற திரு. ஏபிரகாம் மரிய பிலோமினம்மா தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் இளவாலை றோ. க. ஆண்கள் தமிழ் பாடசாலையிலும், இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் தன் ஆரம்பக் கல்வியை பயின்று புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றார். புனித மாட்டீனார் குருமடத்தில் ஆரம்ப குருத்துவ பயிற்சியைப் பெற்று கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலையும் இறையியலையும் கற்றார்.



அருள்சகோதரர், யூட் அமலதாஸ் மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயப் பங்கைச் சேர்ந்த திரு. செபஸ்ரியாம்பிள்ளை திருமதி மரியதயாபரமலர் தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் மாரீசன்கூடல் றோ. க. த. க. பாடசாலையிலும், புனித கென்றி அரசர் கல்லூரியிலும் தன் ஆரம்பக் கல்வியை பயின்று புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர் கல்வி பெற்றார். புனித மாட்டீனார் குருமடத்தில் ஆரம்ப குருத்துவ பயிற்சியைப் பெற்று கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியலும், இறையியலும் கற்றார்.

## கிளி - முல்லை மறைக்கோட்ட முதல்வராக அருள்திரு இருதயதாஸ்



யாழ் மறை மாவட்ட நிதிப் பொறுப்பாளராகவும், (Procurator) யாழ் இடம் பெயர்வின் பின் புனித மரியாள் பேராலய பங்குத்தந்தையாகவும் கடமையாற்றிய அருள்திரு P. இருதயதாஸ் அடிகள் கிளி - முல்லை மறைக்கோட்ட முதல்வராக ஆயரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்னல் நிறைந்த நேரத்தில் கிளி – முல்லை மறைக்கோட்டத்தில் தங்கள் பணி சிறக்க 'பாதுகாவலன்' அன்பு நெஞ்சங்களின் இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றோம்.

இவர் யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையத்தின் வன்னிப் பிரதேச செயற்பாடுகளுக்கும் பொறுப்பாக இருப்பார்.

## "தனியார் பாடசாலைகள்" ஆயர் எமிலின் எண்ணக் கருவாகும்

— அருள்திரு A. அலெக்சாந்தர் S.S.S

மறைந்த யாழ் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் மறைவின் 25 ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி கொழும்பில் நடைபெற்ற போது நற்கருணைநாதர் சபையைச் சார்ந்த அருள்திரு A. அலெக்சாந்தர் அடிகள் தமது மறையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். (தொடர்ச்சி 6 ம் பக்கம்)

## எம்கருத்து

# சேவையின் மறுபெயர் அன்னை திரேசா

ஒரு பன்முக ஆன்மீக ஆளுமையைக் கொண்ட அன்னை திரேசா முழு உலகிற்கும் கிறிஸ்தவத்தின் உயிர் வாழும் சாட்சியாக விளங்குகிறார்.

மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும். அவன் எந்த மதத்தை, மொழியை, இனத்தை, இடத்தை சார்ந்தாலும் என்ற உன்னத கோட்பாட்டை வகுத்து அதற்கு தன்னுடைய வாழ்வாலும், பணியாலும் சாட்சியம் பகிர அன்புப் பணியாளர் சபையை நிறுவினார்.

இன்று அன்புப் பணியாளர் சபை 3000 கன்னியர்களையும் 400 சகோதரர்களையும், 1, 30 ஆயிரம் உடன் உழைப்பாளர்களையும் கொண்டு ஒரு உலக சபையாக விளங்குகிறது.

123 நாடுகளில் 1369 மருத்துவ மனைகளையும், 755 பணி மனைகளையும் 469 அறிவாலயங்களையும் கொண்டுள்ளது.

இரும்புத்திரை போட்ட அல்பேனியா நாட்டில் 1910 இல் நிக்கொலா - டிரானா குடும்பத்தில் லாசர், ஆஜே என்ற சகோதர சகோதரியுடன் அக்னஸ் கொன்சா என்ற பெயருடன் அன்னை திரேசா பிறந்தார்.

இவரது 9 வது வயதில் அரசியல்வாதியான அவர் தந்தை நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.

தாயினதும், 12 வயது சகோதரனதும் உழைப்பிலே குடும்பம் வளர்ந்தது.

1925 இல் சிறுமலர் சின்னத் திரேசாவிற்கு புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டபோது சின்னத் திரேசாவை தன் பாதுகாவலியாக தெரிந்து கொண்டமையால் தான் 1931 இல் வார்த்தைப்பாடு கொடுத்த போது தனது பெயரையும் திரேசா என மாற்றினார்.

1929 இல் தனது 19 வது வயதில் இறையழைத்தை நம்பி எல்லாமே "அந்நியமான" இந்தியாவின் கல்கத்தா மாநகரை நோக்கி தன் பணிக்காக நகர்ந்தார்.

1946 இல் 17 ஆண்டுகால ஆசிரியப்பணியை விட்டு தனது 36 வது வயதில் அன்பின் பணியாளர் சபையை ஆரம்பித்தார்.

துறவற வார்த்தைப்பாட்டின் 4 வது அம்சமாக ஏழைகளுக்கு இலவச தொண்டு என்பதையும் புகுத்தி 20 ஆம் நூற்றாண்டிலும் ஒரு புதிய சபையைத் தொடங்கி கிறிஸ்தவ அன்புப் பணிக்காக உலகம் முழுவதும் சாட்சியம் பகரலாம் என்பதை எண்பித்தார்.

1954 இல் உடல் உழைப்பாளர் சபையும், 1963 இல் சகோதரர்களின் சபையும் 1980 இல் குருக்களுக்கான உடல் உழைப்பாளர் சபையும் நிறுவப்பட்டது.

அன்னை திரேசா முழு உலகிற்கும் கிறிஸ்தவத்தின் உயிர் வாழும் சாட்சியாக இன்று விளங்குவதற்கு அவர் அனுபவித்த துன்ப துயரங்கள் கொஞ்சமானவை அல்ல.

மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான மனம், இறை பலத்தை நம்பி அனைத்து சவால்களையும் துணிந்து கொள்ளும் சக்தி, அன்பினால் அனைவரையும் கட்டி அணைக்கும் பாங்கு, ஆழ்ந்த இறை பக்தி, இறை நம்பிக்கை என்பன தான் அவர் சாட்சிய வாழ்வின் அன்புக் கருவிகள்.

போதனையைவிட சாதனை தான் சாட்சியத்திற்கு சிறந்தது என்பதை செய்து காட்டியபடியால் சுவீடன், இந்தியா, ஒல்லாந்து தபால் தலைகளில் பொறிக்கப்படவும் 1979 இல் நோபல் பரிசு பெறவும் பல பரிசில்களையும், விருதுகளையும் தானே தேடிக் கொள்ளாமல் தமக்காக்கிக் கொண்டார்.

## இழந்த ஒரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்துக்குப் புறம்பான முறையில் மக்கள் கைதுசெய்யப்படுவது. "காணாமல் போவது" போன்ற மனித உரிமை மீறல்கள் குறைந்துள்ளன. எனினும் அதற்கு முற்பட்ட காலத்தில் குறிப்பாக சென்ற ஆண்டு ஆடி மாதம் முதல் கட்டவிழ்க்கப்பட்ட அனர்த்தங்களை நாம் மறந்துவிட முடியாது. விசேடமாக "காணாமற்போனோரை", அதாவது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு இதுவரை எவ்வித தகவலுமின்றிக் காணாமற் போனோரை, நாம் மறந்துவிடக்கூடாது.

நீதி சமாதானக்குழு திரட்டிய தகவல்களின் படி. மேற் கூறியவாறு கடந்த ஒருவருட காலத்தினுள் குடாநாட்டில் காணாமற்போனோரின் எண்ணிக்கை 374. வேறுசில மனித உரிமைக் குழுக்களின் படி அவர்களின் எண்ணிக்கை 500க்கு மேற்பட்டது.

இவ்விடயம் பற்றி அதிகார பூர்வமாக விசாரணைகள் நடாத்தப்பட்டன. ஆனால் அவ்விசாரணைகளின் முடிவுகளோ இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இது இவ்வாறிருக்க, காணாமற்போனோரின் தாய்மார், தந்தையர், உற்றார், உறவினர் ஆகியோரின் துயரமும் அங்கலாய்ப்பும் தொடர்ந்துகொண்டே போகிறது. இதற்கு முற்றுப் புள்ளியிடுவதற்கு அரசாங்கம் இனிமேலும் தாமதமின்றி உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

படையினரால் கைதானோர் இதுவரை உயிரோடிருந்தால், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடம் உறவினருக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். நீதிமன்றத்தில் அவர்கள் விசாரணை செய்யப்பட வழி வகுக்கப்படவேண்டும். அன்றேல், அவர்கள் காணாமற் போய்விட்டார்களென்றால் – அதாவது அவர்கள் கைதாயிருக்கும்போது சட்டத்திற்கு விரோதமாக கொல்லப்பட்டு விட்டார்களென்றால் – அதற்குப் பொறுப்பானவர்கள் நீதிக்குள்ளாக்கப்படவேண்டும். இழந்த ஒரு உயிருக்கு எவ்வித இழப்பீடும் ஈடுகொடுக்க முடியாது. இருப்பினும், காணாமற்போனோரின் நெருங்கிய உறவினர்க்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

யாம் குடாநாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கான காரணங்களுள் ஒன்று. மேஜர் ஜெனரல் பல்கல்லவுடைய நடவடிக்கைகள் என அறிகிறோம். காணாமற்போனோர் பற்றி அவரிடம் நாம் நேர்முகமாகப் பிரஸ்தாபித்தபோது, அவர்களைத் தேடுவதில் தாம் எடுத்துவரும் நடவடிக்கைகளை விளக்கினார். இவரால் இது ஆகுமென்றால், பயங்கர சம்பவங்கள் நிகழ்ந்தகாலத்தில் கடமையாற்றிய அதிகாரிகள் அச்சம்பவங்களுக்குப் பொறுப்பேற்கவேண்டும். இவர்கள் இடம் மாற்றப்பட்டு விட்டார்கள்; அல்லது போர்க்களத்தில் உயிரிழந்து விட்டார்களென்றால், அத்துடன் விடயம் முடிந்துவிட்டதென்றல்ல, அரசாங்கம் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் மனித உரிமை மீறல்கள் புரிந்தவர்களை சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச்செல்ல அனுமதித்தால், அவ்வாறான மீறல்கள் அதிகரிப்பதற்கு வழி வகுப்பதாகும். மாறாக, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பது, அம்மீறல்களைத் தடுப்பதற்கு உதவுவதாகும்.

ஒருசிலர், இப்பயங்கர மனித உரிமை மீறல்களின் கொடூரத்தை "எண்ணிக்கை விளையாட்டு" மூலம் தணிக்கப்பார்க்கின்றனர். அதாவது, தெற்கில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்; இங்கு சில நூற்றுக்கணக்கானோர் மாத்திரம் "காணாமற்போனது" பெரிய விடயமா? என்று அவர்கள் வாதிக்கின்றனர். இவ்வாறான நியாயப்படுத்தல், மனித மாண்பு மீதும் உரிமைகள் மீதும் கொண்டிருக்கவேண்டிய மனப்பாங்கில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். ஒரு உண்மையை நாம் மறுக்கமுடியாது. அதாவது ஒருவர் தானும் சித்திரவதை செய்யப்பட்டால் அல்லது சட்ட விரோதமாகக் கொல்லப்பட்டால் அதைப்பாரிய குற்றமாக எடுக்கவேண்டும். மனித உயிரைப் பொறுத்தவரையில் "எண்ணிக்கை விளையாட்டு" செல்லும்படியாகாது.

# சின்னமடு அன்னையின் பாதுகாவலில்தான் எமது மறைமாவட்டம் தங்கியுள்ளது

-குருமுதல்வர் அருள்திரு. J. P. E செல்வராசா

ஏழு ஆண்டு கால இடைவெளியின் பின் சின்னமடு அன்னையின் திருவிழா நாரந்தனைப் பங்குத்தந்தை அருள்திரு. A. யேசுதாஸ் அடிகளின் பெருமுயற்சியால் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட போது யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் செல்வராசா அடிகள் தெரிவித்தார்.

அவர் தமது மறையுரையில் "சின்னமடு அன்னையின் பாதுகாவலில் தான் எமது மறை மாவட்டம் உள்ளது. கடந்த கால வேதனை மிக்க துன்பமான அனுபவங்களில் மடு அன்னை கொடுத்த பாதுகாப்

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

# இளவரசி டயானா மனித நேயப் பணிகளில் அக்கறை கொண்டிருந்தார்

– அன்னை திரேசா

இளவரசி டயானா துக்ககரமான கார் விபத்தில் பலியானது பற்றி பல தலைவர்களும் ஆழ்ந்த அனுதாபங்களையும், கவலைகளையும் தெரிவித்துள்ளபோது அன்னை திரேசாவும் தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார். இந்தியச் செய்திகள் அன்னை திரேசாவின் அனுதாபச் செய்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளன. தன்னுடைய விவாகரத்துக்கு 10மாதங்களுக்கு முன்னர் அன்னை திரேசாவின் மடத்திற்கு இளவரசி டயானா வருகை தந்திருந்தது குறிப்பிடத்தக்கது. இளவரசி டயானா மனித நேயப் பணிகளில் அதிக அக்கறை கொண்டிருந்தார் என்று அன்னை திரேசா தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

# நிறை வாழ்வை நோக்கிய எமது பயணமே எமது இலட்சியமாகும்

'திசைகள் தேடி' என்ற தலைப்பில் யாழ் மறைக் கோட்டத்தை சேர்ந்த 10 பங்குகளில் இருந்து 16. 8. 97 அன்று அகவொளி நிலையத்தில் இளைஞர்களின் பிரதிநிதிகள் ஒன்று கூடி தமது எதிர் காலத்திட்டங்கள்தீர்மானங்கள் என்பவற்றைக் கலந்தாலோசித்தனர். இளைஞர்களது வளர்ச்சிப் பயணத்தில் பல தடைகளையும், துணைகளையும் இனம் கண்டனர்.

அவர்கள் தமது அறிக்கையில் "நிறைவாழ்வைநோக்கிய (தொடர்ச்சி 5 ஆம் பக்கம்)

யாழ். மறைக்கல்வி நிலையத்தால் நடத்தப் பெற்ற

# யூபிலி ஆண்டு கட்டுரைப் போட்டி முடிவுகள் - 1997

யாழ். மறை மாவட்டம் – யூலை 18

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு 1 | | |
| 1 ஆம் இடம் | செல்வி. லூ. றொய்சி லூஜினி | – | நாவாந்துறை |
| 2 ஆம் இடம் | செல்வி. கொ. கனிஸ் வினித்திரா | – | இளவாலை |
| 3 ஆம் இடம் | செல்வி. ம. யூலியற் இமல்டா | – | நெடுந்தீவு |
| | பிரிவு 2 | | |
| 1 ஆம் இடம் | செல்வி. ந. மரின் நிலானி | – | பாசையூர் |
| 2 ஆம் இடம் | செல்வன். யே. யூட் அருண் செல்வன் | – | ஆனைக்கோட்டை |
| 3 ஆம் இடம் | செல்வன். யோகநேசன் | – | நாவாந்துறை |
| | பிரிவு 3 | | |
| 1 ஆம் இடம் | செல்வன். எ. லியோஜினஸ் | – | பாசையூர் |
| 2 ஆம் இடம் | செல்வி. ஜெ. நிரோஜா | – | ஆனைக்கோட்டை |
| 3 ஆம் இடம் | செல்வி. ம. லூட்ஸ்மேரா | – | நெடுந்தீவு |

அருள்திரு R. H. சகாயநாயகம்
இயக்குனர்.

# புனித வின்சன் டி பவுல் சபையை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்

— குருமுதல்வர் J. P. E. செல்வராஜா

புனித வின்சன் டி பவுல் சபை ஸ்தாபகர் திரு. பிறட்றிக் ஓசான்னம் அவர்களுடைய முத்திப்பேறு பெறும்பட்ட விழாத் திருப்பலியை யாழ். மரியன்னை பேராலயத்தில் 23-8-97 இல் தலைமை தாங்கி நடத்திய யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் செல்வராஜா அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தமது மறையுரையில் "பிறட்றிக் ஓசான்னம் அவர்களின் முன்மாதிரிகையைப் பின்பற்றி இன்று நாமும் பிறரன்புப் பணியில் ஈடுபடவேண்டும். புனித வின்சன் டி பவுல் சபை தனது அன்புப் பணியைத் தொடர்ந்து செய்ய இச்சபையை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்" என்றார்.

திருப்பலியின் பின் பிறட்றிக் ஓசான்னம் அவர்களின் உருவப்படம் ஊர்வலமாக மறைக்கல்வி நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. மறைக்கல்வி நிலையத்தின் ஆன்ம இயக்குனர் அருள்திரு R. சூசைநாதன் ஆசியுரைவழங்க அருள்திரு P. இருதயதாஸ் அடிகளும், சகோ. லியோ எதிர்மன்னசிங்கி அவர்களும் சிறப்புரையாற்றினர்.

– அலெக்ஸ் அமலரட்ணம் –

# ஏவாளால் சாவு நுழைந்தது. மரியாளால் வாழ்வு பிறந்தது.

- அருள்திரு P. M. இம்மானுவேல்

கரவெட்டி பரலோக அன்னை ஆலயத் திருநாள் திருப்பலியின் போது பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருள்திரு P. M. இம்மானுவேல் அடிகள் "ஏவாளால் சாவு நுழைந்தது. மரியாளால் வாழ்வு பிறந்தது" என்று மறையுரை ஆற்றும் போது தெரிவித்தார். தொடர்ந்த அவர் மறையுரையில் 'அன்னை மரியாள் சேற்றில் மலர்ந்த செந்தாமரையாக இப்பாவ உலகில் 'அவதரித்தாள். அவளின் விசுவாசம், தாழ்மை, இரக்கம் போன்ற நற்பண்புகளை நாம் கடைப்பிடித்து வாழ வேண்டியது நமது கடமையாகும்" என்றார். மக்களின் வாழ்க்கையைத் தொடத்தக்க நவநாள் மறையுரைகளை அருள்திரு சூ. அல்றின் O.M.I வழங்கினார்.

— A. M மஞ்சுளிக்கா, கரவெட்டி. —

# சமூகத் தொடர்பு சாதனங்கள்

## 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில்...

### — ஒரு குறுகிய கண்ணோட்டம்

31ஆவது உலக சமூகத் தொடர்பு தினத்தையொட்டி (மே 11, 1997) இக்கட்டுரை பிரசுரமாகிறது. இக்கட்டுரையில் சமூகத்தொடர்பு சாதனங்களால் ஏற்படும் நன்மை, தீமைகள் அவை பயன்படுத்தப்படவேண்டிய வழிமுறைகள் என்ன என்று வத்திக்கான் சங்க ஏடுகளை ஒரு குறுக்காய்வு செய்கிறது.

ஆ-ர்.

2ஆம் வத்திக்கான் சங்கமானது சமூகத்தொடர்புக் கருவிகள் பற்றிய தீர்மானத்தொகுப்பை டிசம்பர் 1963இல் வெளியிட்டது. பாப்பரசர் 6ஆம் சின்னப்பரின் தலைமையில் 8ஆவது அமர்வின் இறுதிக்கட்டத்திலே சமூகத் தொடர்புக்கருவிகள் பற்றிய இத்தீர்மானத் தொகுப்பை 1960பேர் ஏற்று வாக்களித்த போது 164பேர் எதிர்த்து வாக்களித்தனர்.

சமூகத்தொடர்புக் கருவிகள் விளைவிக்கும் தீமைகளைக் கண்டுபிடித்து அவற்றைக் கண்டிப்பதைத்தவிர திருச்சபைக்கு அவற்றோடு வேறு எந்தத் தொடர்பும் கிடையாது எனப் பல குருக்களும், கிறிஸ்தவர்களும் எண்ணியிருந்தபோது உரோமையில் உரோமை ஆயரின் தலைமையில் அனைத்துலக ஆயர்கள் வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி, அச்சுவெளியீடு ஆகியவை பற்றி கலந்தாராய்வர் என யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

இக்கருவிகள் ''கடவுளின் கொடைகள்'' எனப் பாப்பரசர் 12ஆம் பத்திநாதர் எடுத்துரைத்தார். ஆதலால் கடவுளின் மாட்சிமைக்காகவே அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். நாம் செயலற்றிருப்பதால்தான் இக்கருவிகள் தீச்செயல்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. எனவே இக்கருவிகளின் பேராற்றலை கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்திருத்தல் இன்றியமையாதது என்ற கண்ணோட்டத்தில்தான் இத்தீர்மானத் தொகுப்பை நாம் படிக்க வேண்டும்.

மூன்று தசாப்தங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்றும் இன்னும் பொருத்தமான இத்தீர்மானத் தொகுப்பின் முக்கிய பகுதிகளை தொகுத்துத் தர விரும்புகிறேன்.

இரண்டு அதிகாரங்களையும் 24 வசனங்களையும் கொண்ட இத் தீர்மானத் தொகுப்பின் பின்வரும் முக்கிய கருத்துக்கள் பலருக்கும் நிச்சயம் பலன் தரவல்லன.

சமூகத் தொடர்புக்கருவிகளான அச்சுவெளியீடு, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியன பற்றி சங்கத் தீர்மானத் தொகுப்பு வசனங்கள் 1, 2 களில் பின்வருமாறு கூறுகின்றது.

— இக்கருவிகள் தகுந்த முறையில் பயன்படுத்தப்படும் போது மனித இனம் பல நன்மைகளை அடையமுடியும் என்பதை திருச்சபை உணர்ந்துள்ளது.

— ஆனால் இவைகள் தவறானமுறையில் பயன்படுத்தப்பட்டு மனித இனம் நாளாந்தம் சந்திக்கும் அழிவுகளை எண்ணி திருச்சபை வருந்துகின்றது.

இத் தொடர்புச் சாதனங்களின் பயன்பாடு பற்றி வசனம் 4இல் கருத்துத் தெரிவிக்கும்போது

— இவை மக்களின் முன்னேற்றத்திற்கு எந்த வகையிலும் தடைக்கற்களாய் அமையக்கூடாது.

— தொடர்புக்கருவிகளை பயன்படுத்துவது பற்றி சரியான ஒரு மனச்சான்றை இதில் தொடர்புடைய அனைவரும் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென்கிறது.

வசனம் 5இல் செய்தித்துறை பற்றிக் குறிப்பிடும்போது

— தனி மனிதனையோ சமூகத்தையோ பற்றி அறிவதற்கான உரிமை மனித சமுதாயத்திற்கு உண்டு.

— செய்திகளை அறிவிக்கும் முறை நேர்மையானதாகவும், அறநெறிகளுக்கு உட்பட்டதாகவும் அமையவேண்டும் என்று தெரிவிக்கிறது.

இக் கருவிகளை பயன்படுத்துவோருள் குறிப்பாக இளைஞர்களுக்கு வசனம் 10னூடாக சில அறிவுரைகளைக் கூறுகின்றது.

— அளவோடும் கட்டுப்பாட்டோடும் இவற்றைப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளவேண்டும்.

— பார்ப்பவை, கேட்பவை, படிப்பவை பற்றி ஆழ்ந்தறிய முயல வேண்டும்.

— கற்றுக்கொடுப்பவர்களோடும், கற்றோருடனும் ஆராய்ந்து சரியான முடிவு எடுக்கப்படவேண்டும்.

— விசுவாசத்திற்கு, நல்லொழுக்கத்திற்கு பாதகமான காட்சிகள், வெளியீடுகள் பற்றி கவனமுடன் செயற்படவேண்டும்.

வசனம் 14இல் அச்சுவெளியீட்டில் மக்களுக்குள்ள கடமையை உணர்த்தும் போது

— நல்ல அச்சு வெளியீடுகள் வரவேற்கப்படவேண்டும்

— உண்மையான கத்தோலிக்க வெளியீடுகள் ஏற்படுத்தப்பட்டு ஆதரவு நல்கப்படவேண்டும்.

தொகுப்பு
இராட்சையூர் றஜன்

# யூபிலி ஆண்டு எண்டா என்ன அண்ணே?

மறையாசிரியர் இ. ம. ஜெயசீலன்

அண்ணை சென்றமுறைவந்த பாதுகாவலனில், லேவி. 25 உப. 15 அதிகாரங்களை படிச்சுப்பார்க்கும்படி சொன்னியள், அதிலை உள்ளது போல இப்ப வாழ முடியுமே. இப்ப எங்கை அண்ணை அடிமையாய் இருக்கினம். சரி வயல் விளைச்சல் எல்லோருக்கும் பொதுவானது, இது எல்லாம் சரி வருமே அண்ணை?

தம்பி உம்முடைய கேள்வி பொருத்தமான கேள்விதான், பழைய ஏற்பாட்டில் கூறியபடி அக்காலத்திலை செய்ய முடிஞ்சிது, ஏனென்றால் அக்கால சமூக அமைப்பு அப்படி இருந்தது. அதே நேரம் அச்செய்தி இஸ்ராயேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட செய்தி. ஆனால் இன்றைய சமூக அரசியல் அமைப்புக்கள் வேறுபட்டன. இன்று அடிமைத்தனம் இல்லை என்றுசொல்லுறீரோ, எத்தனை நாடுகளில் மக்கள் அடிமைகளாய் இருக்கினம். சரி தம்பி ஏன் எமது சமூகத்திற்குள்ளை பார்ப்போமே. சில குடும்பங்களில் கணவன் தலைவன், மனைவி பிள்ளைகள் அடிமைகள், கணவன் வைச்சதுதான் சட்டம், அடி ஆக்கினை, இது மட்டுமே, சில பணம் படைச்சவர்கள்சாதாரணபடிப்பறிவற்ற பாமரமக்களை அடிமையாக நடத்துவதில்லையா? சில பங்குகளில் பணம் படைச்சவர்கள், பரம்பரை உரிமை பேசித்திரியிறவர்கள் சாதாரண மக்களை அடிமைகளாக நடத்தி, அவர்களுக்கு உரிய உரிமையை கொடுக்காமலிருக்கிறார்களே, இது அடிமைத்தனம் இல்லையா? ஏனப்பா பொது நிலையினரின் பொற்காலம் என்று கூறும் இக்காலத்தில் சில திருச்சபை அதிகாரிகள் பொது நிலையினரின் நியாயமான தேவைகளை, கோரிக்கைகளை, கொடாது இருக்கிறார்களே. இது ஒரு வகை அடிமைத்தனமில்லையா? எனவேதான் யூபிலி ஆண்டு உண்மையான விடுதலையை எம் கிறிஸ்தவ வாழ்வில் கொண்டுவர வேண்டும். அதற்கு மனமாற்றம் எல்லா மட்டங்களிலும் ஏற்படவேண்டும். யார் யாரையெல்லாம் தங்களுடைய வார்த்தையினால், வாழ்க்கையினால் செயலினால், பணத்தினால், அதிகாரத்தினால் அடிமைப்படுத்தி வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு விடுதலையைக் கொடுக்க வேண்டும் யேசு இவ்வுலகில் சமய, சமூக, அரசியல், பொருளாதார விடுதலையைக் கொடுக்க வந்தார். எனவே யூபிலி ஆண்டில் நாம் ஒவ்வொருவருக்கும் அவரவர்க்கு உரியதை, உரியமுறையில் உவப்புடன் கொடுப்போம். மனமாற்றம் பெறுவோம். யூபிலி ஆண்டுமனமாற்றத்தின், மகிழ்ச்சியின்காலம். சரி தம்பி பிறகு சந்திக்கிறேன்.

# ஆயர் இல்லத்தில் 20 ஆண்டுகள்

கிளாக்கர் என்று அன்பாக அழைக்கப்படும் புலோலியைச் சேர்ந்த திரு. ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளை அவர்கள் 1976ஆம் ஆண்டு திருமலை மட்டுநகர் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை யாழ். ஆயரின் செயலராக இருந்த காலத்தில் தம் பணிகளை ஆயர் இல்லத்தில் ஆரம்பித்தார்.

அன்பாகவும், பண்பாகவும் எல்லோரோடும் சிரித்த முகத்தோடும் பழகும் இவர் தன் பணிகளில் மிகவும் பிரமாணிக்கமும், பொறுப்பும் மிக்கவராக கடந்த இருபது ஆண்டுகள் பணி புரிந்துள்ளார்,

மலை நாட்டுத் தோட்டத்தில் வெள்ளைக்கார துரைமாரின் கீழ் எழுதுவினையராகப் பணியாற்றியபின் ஆயர் இல்லத்தில், தட்டச்சாளராக பணிபுரியும் இவரை வாழ்த்துகின்றோம்.

---

யோசப் என்று அன்பாக அழைக்கப்படும்சில்லாலையைச் சேர்ந்த யோசவ் பிலிப்புப்பிள்ளை என்பவர் 1976ஆம் ஆண்டு முதல் ஆயரில்லத்தில் வாகன ஒட்டுனராக கடமையாற்றி 20ஆண்டுகளைநிறைவு செய்துள்ளார்.

எப்போதும் கவனமாகவும் பொறுமையாகவும், நிதானமாகவும் வாகனங்களை ஓட்டி செல்லும் இவர் இளைப்பாறிய ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நீண்டகால வாகனச் சாரதியாகப் பணியாற்றி உள்ளார். இதனால் இவர் ''பிசப்பின் ரைய்வர்'' என்றும் அழைக்கப்படுவதுண்டு.

---

''சண்'' என்று அன்பாக அழைக்கப்படும் யாழ். பிறவுண் வீதியில் வசிக்கும் திரு. சேதுபதி சண்முகசுந்தரம் [சண்முகம்] யாழ். மறைமாவட்டக் குருக்களின் மோட்டார் சயிக்கிள் மெக்கானிக்காக ஆயர் இல்லத்தில் 23 ஆண்டுகளைநிறைவு செய்தவர். 1973ம் ஆண்டு முதல் நிதானமாகவும், நுணுக்கமாகவும், ஆயர் இல்ல மோட்டார் வண்டிகளை திருத்தியமைக்கும் திரு. சண்முகம் ''யமகா'' வண்டிகள் திருத்துவதில் யாழ்நகரில் மிகவும் பெயர் போனவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1978ஆம் ஆண்டு கொழும்பு 'யமகா' கொம்பனியில்6 மாத பயிற்சி பெற்று சான்றிதழ் பட்டம் பெற்ற இவர் ஒரு இந்து சமயத்தவர் என்றாலும் குருக்கள் நட்புடனும், நம்பிக்கையுடனும் பழகும் ஒருவர்.

இருபது ஆண்டுகளைநிறைவு செய்யும் திரு. ஞானப்பிரகாசம் சந்தியாப்பிள்ளை, யோசவ் பிலிப்புப்பிள்ளை, திரு. சேதுபதி சண்முகசுந்தரம் ஆகிய இவர்கள் தொடர்ந்தும் பணிபுரிய 'காவலன்' வாழ்த்துகிறான்.

# சமாதானப்பாதையில் செல்வோம்

—எம். என். நவரட்ணராஜா, வளன்புரம்.

காலத்துக்கு காலம் வெறும் மனித சக்திகளில் மட்டும் எம் நம்பிக்கையை ஊன்றி சமாதானத்தை யாசித்த நாம், அது இன்னும் கைக்கெட்டாத நிலையில், எமது நம்பிக்கையை இறைவனை விடுத்து வேறு யாரில் வைக்கலாமெனத்தேடும் இனமாகவே இன்றும் உள்ளோம். இடம் பெயர்ந்த வாழ்வில் இருந்து ஒருபகுதியினர் மீண்ட நிலையில், உலகெங்கும் மனித இடப்பெயர்வும், அதனோடு ஒத்த அவலங்களும் ஏன் என வேதாகம ஒளியில் ஆய்வு செய்வது பெரிதும் நன்மை பயக்கும்.

ஆதியில் மனிதனைப் படைத்த இறைவன், மானிட வரலாற்றில் வெறும் பார்வையாளராக அல்லர், அதன் பங்காளராக உள்ளார். அவர் வரலாற்றை ஆள்பவராகவும், புதிய தேசங்களை உருவாக்குபவராகவும், அரசுகளை கவிழ்ப்பவராகவும், புதியவர்களை அதிகாரம் எனும் போர்வையால்போர்த்தி அரியணை ஏற்றுபவராகவும் செயலாற்றுகிறார். இவ் இறை—மனித உறவில் ஏற்பட்ட பிளவின் அல்லது விரிசலின் பல்வேறு வடிவங்களே. இன்று இன, மொழி, மதப்பிரச்சனைகளாகி, ஆண்டான் – அடிமை என விஸ்வரூபம் எடுத்து உலகை ஆட்டிப் படைக்கின்றது; உலகை அச்சுறுத்தி நிற்கின்றது.

அன்று இறைவன் இஸ்ராயேல் மக்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையானது, ''என் கட்டளைகளையும் நியாயப் பிரமாணங்களையும் நீங்கள் ஏற்று ஒழுகுவீர்களானால் நான் உங்கள் கடவுளாகவும், நீங்கள் என் மக்களாயும் விளங்குவீர்கள்'' என்பதேயாகும். இதை ஏற்று நடந்தால் ஆசீர்வாதமும் அவ்வாறே மீறின் சாபமும் சாபத்தின் பயனாக மானிட வாழ்வின் சீரழிவையும், பேரழிவையும் திருவிவிலியம் எடுத்

(தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

யாழ் மறைக்கல்வி நிலையத்தில் பயிற்சி பெற்ற மறையாசிரியர்கள் — 1997



இருப்பவர்கள் இடமிருந்து வலம்

1. திரு. S. F. சவுந்தரம், 2. அருட்திரு S. J. இராஜநாயகம், 3. திரு. S. அந்தோனிப்பிள்ளை 4. அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை, 5. அருள்திரு. ரவிச்சந்திரன், 6. அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, 7. அருள்திரு R. H. சகாயநாயகம், (இயக்குனர்) 8. திரு. M. யேசுதாசன், 9. திரு. G. P. பேர்மினஸ், 10. திரு. இ. ம. ஜெயசீலன், 11. திரு. A. பீற்றர்

நிற்பவர்கள் முதல் வரிசை- இடமிருந்து வலம்

1. செல்விகள் ஆன் கிறேஸ், அ. நிர்மலாதேவி, கு. ஸ்ரெலா, யோ. கி. யோதினி சா. மே. யூலியற் றஜனி, தி. வி. நளாயினி ப. காஞ்சனா ம. கொலஸ்ரீனா, அ. அலற்னா, பெ. சா. ஷிறோமினி, பி. சி. கிளமென்ரா, க. றோஸ், எஸ். ரஜேஸ்

(இரண்டாம் வரிசை) இடமிருந்து வலம்

அ. யூடி ஜில்ஸ்கா, தே. அனற்காமினி சு. செல்வநாயகி, யோ. ஜெறோஜினா, யோ. ஆ. யூ. அமுதா யோ. அ. பற்றீசியா, மே. தாரணி, கி. இ. டிலானி, ம. வி. யஸ்மின் ம. ஜெனிட்டா, பே. ஆ. நிறஞ்சினி,

## சமாதானப் பாதையில்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியம்புகிறது. இறை–மனித உறவில் விரிசல் ஏற்பட்டுமனித வாழ்வில் சமாதானம் என்பதே இல்லாது போய் விடுகிறது. இதனால்தான் மனித அவதாரம் எடுத்த இயேசு ''உலகம் தரமுடியாத சமாதானத்தை நான் உங்களுக்குத்தருகின்றேன்'' என்றார். ஆனால் உலகமோ அன்று போல் இன்றும் சமாதானத்தின் ஊற்றும் வழியுமாகிய கிறிஸ்துவை புறம்பே தள்ளிப் பலாத்காரத்தின் தந்தையைத்தெரிவு செய்கிறது. சமாதானத்தின் பிரபுவாகிய கிறிஸ்து இயேசுவை ஏற்று வாழ்வதில்தான் நாடுகளினது எதிர்காலம் தங்கியுள்ளது. உரோம பேரரசு நிலைகுலைந்து போனதிற்குக் காரணம் அதன் தீச்செயல்களும் அதன் சிலைவழிபாடுகளுமே என்கிறார் புனித அகுஸ்தீனார்.

எனவே தான் எரேமியாஸ் இறைவாக்கினர் வாயிலாக இறைவன் ''நம் மக்களோ நம்மை மறந்து விட்டார்கள். பொய்த் தெய்வங்களுக்குத் தூபம்காட்டுகிறார்கள், நெடுஞ் சாலையைவிட்டு விலகிக் காட்டு வழி செல்லுகிறார்கள். இவ்வாறு நடந்து தங்கள் நாட்டைத் திகிலுக் குரியதாக்குகிறார்கள் என முறையிடுகிறார். அந்நிய படையெடுப்புக்கள் யாவும் இறைத்தண்டனையே என்பதற்கு வேதாகமத்தில் ஏராளமான சான்றுகள் உண்டு. எமது மண்ணின் இழி நிலைக்கும் இறையுறவில் ஏற்பட்ட விரிசலே காரணமாகும்.

''எங்கள் மானம் எல்லாம் போயிற்று. நாங்கள் எங்கள் வீடுகளை விட்டு அகன்றோம். எங்கள் வீடுகள் எல்லாம் தகர்க்கப்பட்டன. சாவு பலகணிவழியாக உள்ளே நுளைந்தது'' என இறை உறவின் விரிசலின் விளைவை இறைவாக்கினர் வேதனையுடன் எடுத்துக் கூறுகிறார்.

இன்று எமக்கு ஏற்பட்டுள்ள அவல நிலைக்குக் காரணத்தை உணர்ந்து, சமாதானப் பாதையிற் செல்வோம்.

## "அன்பு" அநேக வேதசாட்சிகளையும் எண்ணற்ற வின்சன் டி பவுல்களையும் உருவாக்கும்"

S. லியோ எதிர்மன்னசிங்கி சுண்டிக்குளி- திருமுழுக்கு அருளப்பர் பந்தி,

''தாய் தன்னைப்பற்றிச் சிந்திக்காதவளாக, தன்னை உடைத்து உருக்கி தன் குழந்தையை வளர்ப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறாள். அதே போன்று கிறிஸ்தவர்களாகிய நாம் எம்மைக் கடவுளுக்கும் துன்பப்படும் சகோதரர்களுக்கும் வழங்கக் கடமைப்பட்டுள்ளோம்'' இந்த வசனங்கள் 22ஆகஸ்ட் 1997 நாள் முத்திபேறு பெற்றபிறட்றிக் ஓசான்னம் தனது நண்பரான நீம்ஸ் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் காணப்படுகின்றது. பிறட்றிக் ஓசான்னம் இல்லறத்தில் ஈடுபட்டு சிறந்த கணவனாக, நல்ல தந்தையாக, பேராசிரியராக நண்பனாக சகோதரராக வாழ்ந்ததோடு மட்டுமல்லாது தனது வாழ்வின் ஒரு பாதியை ஏழைகளுக்கும் அர்ப்பணித்து வந்தார். துறவறவாழ்வில் ஈடுபட்டவர்கள் தான் சேவை புரியவேண்டும் என்ற எண்ணம் மாறி இல்லறத்தில் ஈடுபட்டவர்கள்கூட தமது சுயநலமற்ற சேவைமூலம் இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பூஜை மலர்களாக புனிதத்துவமடையலாம் என்பதற்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தந்தை எவ்வழியோ, மகனும் அவ்வழியே என்பது போல் பிறட்றிக் ஓசான்னத்தின் தந்தையும் தாயும் கூடத் தருமம் செய்வதிலும் கைவிடப்பட்டோருக்கு ஆறுதல் கூறுவதிலும் முன்னின்று உழைத்தார்கள். இவரது தந்தை மருத்துவவைத்தியராக இருந்ததினால் தன்னிடம் வரும் ஏழை நோயாளிகளிடமிருந்து பணம் பெறாமலேயே சிகிச்சை அளித்தார். நல்ல காரியங்கள் செய்யும் போதெல்லாம்; ஏழைகளைச் தரிசிக்கச் செல்லும் போதெல்லாம் மகன் பிறட்றிக்கையும் கூட்டிச் சென்றார்கள். இதனால் இச் சிறுவனின் பசும் மனதில் இரக்கம், பரிவு, பகிர்தல் போன்ற பண்புகள் வேர்விடத் தொடங்கின.

பிறட்றிக் வளர வளர கல்வியிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கி பல்கலைக் கழகம் சென்று சட்டத்துறையில் தேர்ச்சி பெற்றார். இதேவேளை பிரெஞ்சுப் (French) புரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிய தனக்கு ஓர் கடமை உண்டு என உணர்ந்தவராக தனது பேரராசிரியரையும் இரக்ககுணம் படைத்த

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

# வாசகர் கருத்து

பாதுகாவலன் மிகச் சிறப்பாக இப்போது வெளிவருவது கண்டு மகிழ்ச்சி, வன்னியில் இருந்து செய்திகளை அனுப்பவும், தொடர்பாளர்களாகப் பணியாற்றவும் எங்களால் இயன்றதை செய்வோம். திரு. ஆரோக்கியநாதர் மாஸ்ரரும் வன்னி தொடர்பாளராக பணியாற்றுவார். செய்திகளை அனுப்புவது பற்றி அவரோடும் கதைத்திருக்கிறேன். பாதுகாவலன் ஆசிரியர் தலையங்கம் மிகவும் சிறப்பாக உள்ளது. அதனால் பாதுகாவலன் புது மெருகு பெறும் என்று நம்புகிறேன். 30 . 5 - 97 இதழ் மிகவும் சிறப்பாக உள்ளது. குறிப்பாக 1 வது பக்கம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. யூன் 97 இதழின் முதற் பக்க அமைப்பு சற்று நெருக்கமாகி விட்டது. பாதுகாவலனில் இப்போ நிறைய செய்திகள் வெளிவருகின்றன. இது பாராட்டத்தக்கது. நிறைய செய்திகளை தொடர்ந்தும் பிரசுரிக்கவும். 'பாதுகாவலன்' சிறப்புற வளரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

அருள்திரு சந்திரபோஸ் (பங்குத்தந்தை)
புதுக்குடியிருப்பு.

*எமது கிளிநொச்சி மறைக் கோட்ட தொடர்பாளர் பணியை பொறுப்பேற்றமைக்கு நன்றி. வன்னிப் பிரதேச செய்திகளை எமக்கு அனுப்புவதற்கு திரு. ஆரோக்கியநாதர் மறையாசிரியரையும் ஊக்குவிப்பது மகிழ்ச்சி தருகிறது. செய்திகளை எங்களுக்குத் தயவு செய்து உடனுக்குடன் அனுப்பி வையுங்கள். நிரந்தரமாகக் குடியிருப்போர் மத்தியில் எமது பாதுகாவலன் பத்திரிகையை விற்பனை செய்வதற்கான திட்டத்தையும் இடுங்கள் என அன்பு வேண்டுகோள் விடுக்கின்றேன். பாதுகாவலன் பற்றிய குறிப்புக்களை அனுப்பி வையுங்கள். அவை எங்களை எமது பணியில் நீண்ட தூரம் இட்டுச் செல்லும். (ஆ – ர்)*

யூலை 97 இதழில் எமது வின்சன் டி பவுல் சபை ஸ்தாபகர் பிறட்டிக் ஓசான்னம் அவர்களுடைய முத்திப்பேறு பெற்ற பட்ட சிறப்பிதழ் மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

S. லியோ எதிர்மன்னசிங்கி வின்சன் டி பவுல் சபை

புதுப்பொலிவுடன் பவனி வருகின்றான் பாதுகாவலன், வளர்ச்சி கண்டு வாழ்த்துகிறேன். மகிழ்கிறேன். வாழ்த்து தாமதித்தமைக்கு வருந்துகிறேன்.

யாழ் நகர மக்களை நேரில் கண்டு கதைத்து, அவர்களின் இன்ப துன்பங்களில் பங்குகொள்ள மனம் பலமுறை துடித்தாலும் சந்தர்ப்பம் இல்லாததை எண்ணி மனம் வருந்தும் அதே வேளையில் ''பாதுகாவலன்'' மூலம் யாழ் மறை மாவட்டத்தின் செய்திகளை அறிந்து கொள்வதில், அங்குள்ளவர்களுடன் தொடர்பு கொள்வதைப் போன்ற ஒரு சிறு திருப்தி.

பாதுகாவலனின் ''வாசகர் கருத்து'' மூலம் யாழ் வாழும் அன்பு நெஞ்சங்களுக்கு அன்பும் வாழ்த்துக்களும் கூறுவதோடு என் செபத்தில் எப்போதுமே உங்களுக்கு பெரும் பங்கு உண்டு என கூறிக்கொள்ள விரும்புகிறேன். உங்கள் வேதனை கலந்த நாட்டு நடப்பு அனுபவங்கள், தொடரும் துயர அவலநிலை கூடிய சீக்கிரமே மகிழ்ச்சியானதாக மாற இறைவன் அருள்புரிவாராக.

கண்கள் சந்திக்கா விட்டாலும் பேனா மூலம் உங்களை சந்திக்க வாய்ப்பளித்த காவலனுக்கு என் நன்றி. பாதுகாவலனின் பணி தொடர, வளர, சிறக்க என் வாழ்த்துக்கள்.

-அருட்சகோதரி ரஞ்சி. (கொழும்பு)

கொழும்புப்பகுதி நிருபராகவும், எழுத்தாளராகவும், கொழும்பு றஞ்சி என்ற பெயரில் எழுதி வந்த இவர் Sisters of the cross என்னும் சபையில் பயிற்சி பெற்று அருள் சகோதரியாகி உள்ளார்.

பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் சார்பில் அவருக்கு எமது வாழ்த்துக்களையும், தொடர்ந்தும் எழுதுங்கள் என்ற வேண்டுகோளையும் அன்புடன் விடுக்கின்றோம். (ஆ-ர்)

---

நான் சற்கோட்டை சவேரியார் ஆலய பங்கில் வாழ்ந்து வருகிறேன். யூலை மாத பாதுகாவலனில் திரு. இ. ம. ஜெயசீலன் (மறையாசிரியர்) அவர்களின் வெள்ளிவிழா மலரையும் பார்த்து அகமகிழ்ந்தேன்.

அதன்பிரகாரம் அவரின் ஆன்மீகத்துறையிலான மகத்தான சேவையை கவிதையால் வாழ்த்த விரும்பி இத்துடன் எனது கவிதையையும் அனுப்புகிறேன். பிரசுரிப்பீர்களென நம்புகிறேன்.

மறையாசானே வாழ்க நீ பல்லாண்டு

பீடமதில் புடமிட்டு பாட்டுகள் பாடிடுவாய்
மேடையிலே நாடகங்கள் நெறியுடனே ஏற்றிடுவாய்
பொம்மைகளை ஊடகமாய் காட்சியிலே சித்தரிப்பாய்
மாணவர்க்கு யேசுவின் காவியத்தை தினமுரைப்பாய்.

கே. ஆர். திருத்துவராஜா, அல்வாய்

பாதுகாவலன் பத்திரிக்கையைப் பார்த்து வாயார வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகிறேன். நீண்ட காலப் போரும் அதன் தாக்கங்களும் மக்கள் உள்ளங்களை விட்டு நீங்காத நிலையில் ஒரு பொற்காலத்தை நோக்கி நடந்து செல்ல துணிவுடன் முன்வந்தமைக்கு இறைவனுக்கு நன்றி. தங்கள் முயற்சிகள் யாவும் கோடி கோடியாய் பயனளிக்குமென மீண்டும் மீண்டும் வாழ்த்துகிறேன்.

''வாழ்க எங்கள் பாதுகாவலன். வளர்க அதன் பணிகள்''

இ. மற்றில்டா

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

## ST. PATRICK'S COLLEGE JAFFNA
## அனுமதி விண்ணப்பம் — 1998

பின்வரும் வகுப்புகளுக்கு பட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு ; 01-02-92 — 31-01-93 ( இரு திகதிகளும் உட்படப் ) பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் ஆண்டு : 1989 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஆறாம் ஆண்டு ; 1987 இல் பிறந்திருக்க வேண்டும்.
ஒன்பதாம் ஆண்டு : 1984 இல் பிறந்திருக்க வேண்டும்.

* விண்ணப்பப் பத்திரம் ( பரீட்சை கட்டணம் உட்பட ) ரூபா 175/= 01-09-97 தொடக்கம் 22-09-97 வரை பாடசாலை நாட்களில் காலை 9-00 — பி. ப. 1-00 வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
* நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 26-09-97 ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9-00 — நண்பகல் 12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.
* அனுமதிப் பரீட்சை 04-10-97 ( சனிக்கிழமை ) காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்:

| ஆண்டு | சமூகம் தரவேண்டிய நேரம் ( காலை ) | பரீட்சை ஆரம்பம் காலை |
|---|---|---|
| 9 | 8-00 | 8-30 |
| 6 | 8-00 | 8-30 |
| 4 | 8-00 | 8-30 |
| 1 (இல : 01 — 100) | 8-00 | 8-30 |
| 1 (இல : 101 — 250) | 10-30 | 11-00 |

* 6ஆம், 9ஆம் ஆண்டுகளுக்கு நடாத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.
* தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

A/42/97 கல்லூரி அதிபர்

## முகமாலை
## புனித ஆரோக்கிய அன்னை திருவிழா
## 21 — 09 — 1997

12 - 09 - 97 மாலை 4 . 30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
நவநாள் வழிபாடுகள் தினமும் 4 . 30 மணிக்கு ஆரம்பமாகும்
20 - 09 - 97 மாலை 4 . 30 மணிக்கு நற்கருணை விழா நடைபெறும்.
21 - 09 - 97 காலை 7 . 30 மணிக்கு திருநாட் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சுருப பவனியும் இடம் பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பங்குத்தந்தையும், பங்குமக்களும்

A / 41 / 97

## யாழ் புனித மாட்டீனார் குருமடம்

யாழ் மறைமாவட்டத்திலே குருவாகப் பணிபுரிய இறைவன் உன்னை அழைக்கிறார்.
மாணவர்களே, உங்கள் வாழ்வை இறைபணிக்கு அர்ப்பணியுங்கள்.

1998ம் ஆண்டு எமது குருமடத்தில் சேர விரும்புகிறவர்கள் உடனடியாக உங்கள் பங்குத்தந்தையுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விண்ணப்பப் படிவங்களை பங்குத் தந்தை மூலமாக எமக்கு அனுப்பி வையுங்கள்.

தற்போது 8ம் ஆண்டிலும் அதற்கு மேலும் கல்விபயிலும் மாணவர்களினதும், க. பொ. த. சாதாரண தர (G. C. E. O/L), உயர்தர (G. C. E. A/L) பரீட்சைகளிற் சித்தியடைந்த மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அருள்திரு றெஜி ராஜேஸ்பரன்
அதிபர்

புனித மாட்டீனார் குருமடம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

A/44/97

## அமலமரித் தியாகிகளுடன் இணைந்திடவருக

பிரஞ்சுப் புரட்சியினால் உடைந்த சமுதாயத்தை உருவாக்க புனித இயூஜின் டி மசனெட் கண்ட கனவு

'' எளியோர்க்கு நற்செய்தி நவில
இறைவன் என்னை அனுப்புகிறார் '' என்பதாகும்.

**இளம் உள்ளங்களே!**

அழைத்தல் விதையை அன்பின் ஆண்டவர்
உங்கள் உள்ளத்திலும் விதைத்திருக்கலாம்.
வாருங்கள்! வந்து பாருங்கள்!

உலகெங்கும் நற்செய்தி நவில அமலமரித்தியாகிகள் குடும்பத்துடன் வந்து இணையுங்கள்.

**ஆண்டு 10 | க. பொ. சாதாரணம் | க. பொ . உயர் மாணவரும் மேற்பட்டவரும் விண்ணப்பிக்கலாம்.**

தொடர்பு :
புனித சூசையப்பர் குருமடம்
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்

A / 43 / 97

## மந்திகை வைத்திய நிலையத்தில் கத்தோலிக்க ஆலயம்

கரவெட்டி பங்குத்தந்தை அருள்திரு A. F. பெனற் அடிகளின் முயற்சியினால் மந்திகை வைத்திய நிலையத்தில் குழந்தை யேசு சிற்றாலயம் ஒன்று 30.08.97 அன்று திறந்து வைக்கப்பட்டது. யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் J. P. E செல்வராஜா அடிகள் மேற்படி ஆலயத்தை திறந்து வைத்து திருப்பலி நிறைவேற்றினார். ''மந்திகை வைத்திய நிலையத்திற்கு வருகை தரும் கத்தோலிக்கர்களின் நலன் கருதி மேற்படி ஆலயம் திறக்கப்படுகின்றது. உடல் உள நோயினால் வருந்தி வருவோருக்கு குழந்தை யேசுவின் ஆசிரும் ஆன்ம நலனும் நிறையக் கிடைக்கும்'' என்று பெனற் அடிகளார் பாதுகாவலனுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

### விண்ணக வாழ்வின் 31-ம் நாள் நினைவு



எலியாஸ் மாகிறேற்

மண்ணில் 1921.11.10 விண்ணில் 1997.08-01

நாங்கள் உங்களை அன்பு செய்தோம். இறைவனோ உங்களை அதிக அன்பு செய்தார். சீவியத்தில் நேசித்தோம், மரணத்தில் மறவோம்.

மதுரமான யேசுவே! மரண பாக்கியமடைந்த உமது அடியாள் எலியாஸ் மாகிறேற்றுக்கு முடிவில்லாத பேரின்ப பாக்கியத்தை அளித்தருள வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள், சகோதரர்,
பேரப்பிள்ளைகள்.

1ஆம் ஒழுங்கை
வளன் புரம்
கொழும்புத்துறை.

A/39/97

### ஈராண்டு நினைவு



திருக்குடும்பக் கன்னிகை
அருட்சகோதரி
மேரி பிறிஸ்கா
சந்தியாப்பிள்ளை

மலர்வு 1935.04.21 பிரிவு 1995.08.27

அன்பான அருட்செல்வி
பிறிஸ்கா
ஆண்டு இரண்டாகிறதே
நீர் மறைந்து
ஆண்டுகள் நாற்பது இறை
பணிக்கு அர்ப்பணித்த
அன்னையுங்கள் சேவைதனை
நாம் மறவோம்.

சகோதர, சகோதரிகள்
மருமக்கள், குடும்பத்தினர்.

A/37/97

### விண்ணக வாழ்வின் 9ஆம் வருடம்



திருமதி மரியபாக்கியம்
செபஸ்தியாம்பிள்ளை
( ஒய்வுபெற்ற ஆசிரியை )

மலர்வு 23-06-1923 — மறைவு 18-09-1988

இவரின ஆன்மசாந்திக்காக 18 - 09 - 97 வியாழக்கிழமை காலை 6 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் பலி ஒப்புக்கொடுக்கப்படும் என்பதை அன்பு நெஞ்சங்களுக்கு அறியத் தருகிறோம்.

கணவன், பிள்ளைகள்
அருட்சகோதரிகள்
M. அசும்ரீனா A. C.
மரியகொறட்டி S.C.J.M.

A/38/97

### 1 ஆம் வருட நினைவு



ஒய்வு பெற்ற ஆசிரியர்
திரு. சந்தியாப்பிள்ளை
யோசப் மேரி

அன்னை மடியில்
1931 - 12 - 08

ஆண்டவன் அடியில்
1996 - 08 - 10

வாடா மலராய் வாழ்வீர்
என்றிருந்தோம்.
காலன் கவர்ந்து விட்டாலும்
கணங்கள் பல சென்றாலும்
காயாது உம் நினைவு.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்,
சகோதரர், உற்றார், உறவினர்.

முருகன் கோவிலடி,
நெல்லியடி, கரவெட்டி.

A / 40 / 97

## அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்தில் நினைவு விழா

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் மறைவின் 50 ஆண்டு நிறைவையும், அச்சுவேலி மண்ணின் மகனும் சுவாமி ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தந்தையுமான புலவர் தம்பிமுத்துப் பிள்ளையின் நினைவையும், தமது இளைஞர் மன்றத்தின் 25 ஆண்டு நிறைவையும் 31-8-97 இல் அச்சுவேலி சுவாமி ஞானப்பிரகாசர் இளைஞர் மன்றத்தினர் வெகுசிறப்பாகக் கொண்டாடினர்.

யாழ். மறைமாவட்டக் குரு முதல்வரும், மண்ணின் மைந்தனுமாகிய அருள்திரு செல்வராசா அடிகள் சுவாமி ஞானப்பிரகாசரின் வளர்ப்புத் தந்தை தம்பிமுத்துப் புலவர் பற்றி உரையாற்றினார். அச்சுவேலிப் பங்குத்தந்தை அருள்திரு யேசுரட்ணம் அடிகளாரின் வழி நடத்துதலில் அச்சுவேலி இளைஞர் மன்றத்தால் நடாத்தப்பட்ட மேற்படி விழா புனித சூசையப்பர் ஆலய முன்றலில் இடம் பெற்றது.

## நிறைவாழ்வை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது பயணமே எமது இலட்சியம் ... எமது சமூகத்தை விட்டு வெளியேறாது புளிக்காரம் போல நாம் சமூக மாற்றத்திற்காக உழைக்கவும், எமது சுதந்திரமான இயக்கத்திற்காக ஒன்றிணைந்து செயற்படவும் விரும்புகிறோம். என்று தெரிவித்துள்ளனர்.

## சின்னமடு....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிற்கு சாட்சியம் இங்கு கூடியிருக்கும் மக்களின் தொகையாகும்'' என்றார்.

சின்னமடு அன்னையின் யாத்திரைத்தல திருத்தவேலைகளை நாரந்தனைப் பங்குத்தந்தை செய்து முடித்த பின் ஆவணி 5, 97 இல் மேற்படி திருவிழா கொண்டாடப்பட்டது. வடபிராந்திய போக்குவரத்து சபை ஒழுங்கு செய்து தந்த போக்கு வரத்து வசதியினால் 7 பஸ்வண்டிகள் நிறைய மக்கள் வந்து திருவிழா கோலாகலமாக நடந்ததாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ் நகரில் முதல் தடவையாக மனித முன்னேற்ற நிலையத்தில் கூரைத்தகடுகள் தயாரிப்பு நிலையம்

MCR (Micro Concrete roofing Sheets) கூரைத்தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை யாழ் நகரில் முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. HUDEC – மனித முன்னேற்ற நிலையமும் HDL அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து G.T.Z நிறுவனத்தின் உதவியுடன் தயாரித்த கூரைத்தகடுகள் விற்பனைக்கு வெளியாகி உள்ளன. உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்காது எனப் பரீட்சிக்கப்பட்ட தனிச்சீமெந்து கல்மண் கலவையில் செய்யப்படும் மேற்படி கூரைத்தகடுகள் நான்கு சாதாரண ஓடுகளின் விசாலம் கொண்டவை. யாழ் மண்ணில் கூரைத்தகடுகளின் தட்டுப்பாட்டையும், உயர்ந்த விலையையும் கவனத்தில் எடுத்து புதிய முறையில் நியாயமான விலையில் வேலை வாய்ப்பளிக்கும் நோக்கோடு இக்கூரைத் தகடுகள் இங்கு உற்பத்தியாக்கப் படுகின்றன. காலப் போக்கில் இவை குடிசைக் கைத் தொழிலாக மாற்றப்படக் கூடியவை என்று இயக்குனர் அருள் திரு. R. சூசைநாதன் அடிகள் காவலனுக்கு கருத்து வெளியிட்டார்.

வேதபோதகநாடுகளின்

## பாதுகாவலி சிறுமலர் திரேசாளின் மறைவின் நூற்றாண்டு விழா

செப். 30, 1897—செப். 30, 1997



## சில்லாலை — சின்னறோமைப் பங்கின் 30வது குருமணி

### ★ அருள்திரு ஜேம்ஸ் டண்ஸ்ரன்



சில்லாலை கதிரைமாதா ஆலயப் பங்கைச் சார்ந்த திரு. திருமதி செல்வரட்ணம் பேர்ணடேற் புஷ்பம் தம்பதிகளின் புதல்வரான அருள்திரு செ. யேம்ஸ் டண்ஸ்ரன் சின்னறோமை பெற்றெடுத்த 30வது குருமணியாவார். 25-7-97 இல் மன்னார் ஆயர் அவர்களால் கொழும்பு புனித லூசியா பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் 21-8-97 இல் சில்லாலைப்பதியில் தம் முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

இத்திருப்பலியில் மறையுரையாற்றிய சில்லாலையின் முன்னாள் பங்குத்தந்தை அருள்திரு P. இருதயதாஸ் அடிகள் "சில்லாலைப் பங்கு காலத்திற்கு காலம் குருக்களைப் பெற்றெடுத்துள்ளது, அருள்திரு யேம்ஸ் டண்ஸ்ரன் அவர்கள் இந்த வரிசையில் 30வது குரவராவர்;" என்றார். இரண்டாம் கொரிந்தியர் நான்காம் அதிகாரத்தை மேற்கோள்காட்டித்தொடர்ந்த தம் மறையுரையில் "நாங்கள் யேசுவின் பொருட்டு வந்த உங்கள் பணியாளர்களே ... இந்த ஈடிணையற்ற வல்லமை எங்களிடமிருந்து வரவில்லை அது கடவுளுக்கே உரியது" என்றார்.

## தனியார் பாடசாலைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அரசு கத்தோலிக்க கல்வி முறையை முடக்க முனைந்த போது தனியார் பாடசாலைகளை உருவாக்கியது ஆயர் எமிலின் திட்டமாகும். கிறிஸ்தவ விழுமியங்களைப் பேணிப்பாதுகாக்கும் இக்கல்வித் திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த கருதினால் தோமஸ் கூறேயுடன் இணைந்து இவ்வாறு திட்டமிட்டார்" என்றார்.

மேலும் அவர் தமது மறையுரையில் "ஆயர் எமில் போன்ற நல்ல உயர்ந்த மனிதர்கள் தமது சமயத்திற்கோ, இனத்திற்கோ மட்டும் உரியவர்களல்ல" என்று 1973 ஆம் ஆண்டு கல்வி அமைச்சராய் இருந்த நிசங்க விஜயரத்தின தெரிவித்தார் என்றார்.

அருள்திரு மதுரநாயகம், அருள்திரு அன்ரன் ராஜநாயகம், அருள்திரு தேவராஜா ஆகியோர் அலெக்சாந்தர் அடிகளுடன் இணைந்து இத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

## புதிய குருக்களின் நியமனங்கள்

| | | |
|---|---|---|
| அருள்திரு யூட் நிக்சன் | — | துணைப்பங்குத்தந்தை, பருத்தித்துறை. |
| அருள்திரு யூட் அமலதாஸ் | — | துணைப்பங்குத்தந்தை, சென் ஜேம்ஸ், குருநகர். |
| அருள்திரு அகஸ்ரின் | — | துணைப்பங்குத்தந்தை, பெரியகோவில். |

## யூபிலி 2000 ஆண்டு 2ம் கட்ட செயற்பாடுகள் ஆரம்பம்

★ இரண்டாம் வத்திக்கான் சங்க போதனைகளைப் பரப்ப மறையறிவுப் பாடத்திட்டம்.

★ ஆலயத்திருவிழா நவநாள் மறையுரைக் குறிப்புகள்.

★ கிறிஸ்து இயல் கருத்தரங்குகள்.

யூபிலி2000 மறைமாவட்ட ஆயத்த மத்திய குழு இரண்டு கட்டங்களாகி செயற்படத் திட்டமிட்டது.

1. யூபிலி 2000 எண்ணக்கரு அறிமுகம்.
2. இவ்வாண்டின் மையப்பொருள். "இயேசுக்கிறிஸ்து" அறிமுகம்.

இதில் முதலாவது கட்டத்தை நிறைவு செய்து கொண்டு இரண்டாம் கட்டத்தை ஆரம்பித்துள்ளது. "யேசுக்கிறிஸ்து" பற்றிய நவநாள் மறையுரை மையப் பொருட்களும், "கிறிஸ்தவ சீடத்துவம்" என்ற மன்றக்கோட்டங்களில் நடத்தப்படக்கூடிய ஒரு நாள் கருத்தரங்கும் தயார் நிலையில் உள்ளது என்று மத்திய குழு செய்தி வெளியிட்டுள்ளது.

## சிலாவத்தை புனித அன்னாள் ஆலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது

முல்லை நகரில் சிலாவத்தை என்னும் இயற்கை எழிலுடைய மூன்று வளங்களையும் தன்னகத்தே கொண்ட இக்கிராமத்தில் புனித அன்னம்மாள் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயமானது 1990ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ஆம் திகதி விமான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு ஒரு கற்றூண் கூட இல்லாத அளவிற்கு தரைமட்டமாக்கப்பட்டது. இக்கிராமத்தில் பாதுகாவலியாம் புனித அன்னம்மாளின் அரவணைப்பில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அகதிகளாக்கப்பட்டனர். இதனால் ஆலயத்தை இழந்த மக்கள் தமது சொத்துக்கள், நிலபுலங்கள், சொந்த உறவுகள் எல்லாவற்றையும் பிரிந்து வெவ்வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு சிலாவத்தை கிராமவாசிகளின் வாழ்க்கையில் புதிய பயணம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாறு துன்பத்தில் துவழ்ந்த மக்களை பாதுகாவலியாம் புனித அன்னம்மாள் தனது கருணையினால் மீண்டும் 1997 மார்ச் மாதம் தன்னருகில் வரவழைத்தார். இதன்படி இறையன்பில் இல்லிடங்களுக்கு வந்தகிய மக்கள் முதலில் நமது ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்ய என நமது பங்கு குருவான அருள்திரு. ஜோர்ச் அடிகளாருடன் கலந்துரையாடி செயல்பட ஆரம்பித்தனர். இவ்வாறு செயல்படும் வேளையில் யாழ் மறைமாவட்ட ஆயரான தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் வந்து மேற்பார்வையிட்டு சில ஆலோசனைகளையும் வழங்கினார். ஆயரது ஆலோசனைப்படியும், பங்கு குருவின் ஊக்குவிப்பினாலும், பங்குமக்கள் புதிய உத்வேகத்துடனும், ஆர்வத்துடனும், ஒற்றுமையுடனும் நமது ஆலயத்தைக் கட்டி எழுப்பினர். இவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட ஆலயத்தில் 1997.03.15 அன்று புதிய பரிநாமத்துடன் ஆலய நுழைவிழா கொண்டாடினர்.

இதன் பின்னர் பங்கு குருவின் உற்சாகத்தின் பெயரில் மக்கள் ஆர்வத்துடனும், இறையன்புடனும் 23.07.1997 அன்று திருவிழாவிற்கான கொடியேற்றல் நிகழ்வுகள் வெகு விமர்சையாக கொண்டாட ஆரம்பித்தனர். 26.03.1997 அன்று காலை 6.45 மணிக்கு முல்லை வட்டார ஏழு குருவானவர்கள் ஒன்றுகூடி திருநாட்திருப்பலி நிறைவேற்றினர். எமது பங்கிற்கு 1986ஆம் ஆண்டு அருட்சகோதரனாக வந்து பணியாற்றிய அருள்திரு அன்ரனி அடிகளார் மறையுரையாற்றினார்.

செல்வி. ஞானப்பிரகாசம் சுபாஜினி, யாழ் பல்கலைக்கழகம்.

## புதிய நியமனங்கள்

| | | |
|---|---|---|
| அருள்திரு R. H. சகாயநாயகம் | – | யாழ் மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளர் |
| அருள்திரு C. G. ஜெயக்குமார் | – | யாழ் மறைமாவட்ட மனித முன்னேற்ற நிலையப் பொறுப்பாளர். |
| அருள்திரு M. E. பயஸ் | – | பங்குத்தந்தை, நாவாந்துறை |
| அருள்திரு J. J. மவுலிஸ் | – | பங்குத்தந்தை, நாரந்தனை |
| அருள்திரு M.X. கருணாரட்ணம் | – | பங்குத்தந்தை, வவுனிக்குளம். |
| அருள்திரு J. B. அன்ரனிதாஸ் | – | பங்குத்தந்தை, இரணைப்பாலை. |

## மரணமே இனி எமது முடிவு என்ற மனநிலை முதியோர் மத்தியில் இருந்து அகற்றப்பட வேண்டும்

— மாகாண முதல்வர் அருள்திரு P. யேசுநேசன் —

யாழ் மறைமாவட்டத்தின் வழி நடத்துதலில் திருச்சிலுவைக் கன்னியர்களால் பராமரிக்கப்படும் புனித சூசையப்பர் முதியோர் இல்லம் இடம்பெயர்வின் பின்னர் 6.8.97 அன்று மீள ஆரம்பிக்கப்பட்டது.

அருள் சகோதரி இம்மானுவேலின் தலைமையின் கீழ் மீண்டும் தம் பணிகளை திருச்சிலுவைக் கன்னியர்கள் ஆரம்பித்துள்ளனர். மேற்படி ஆரம்ப நிகழ்வின் போது அமலமரித்தியாகிகளின் மாகாண முதல்வர் அருள்திரு P. யேசுநேசன் அடிகள் மறையுரை ஆற்றும் போது" முதியோர் இல்லம் மரணத்தை எதிர் நோக்கும் இடமல்ல. அது மனமகிழ்வின் இடம். வாழ்வில் அனைத்தையும் முடித்து விட்டோம் மரணமே இனி எமது முடிவு என்ற மனநிலை முதியோர் மத்தியில் இருந்து அகற்றப்பட வேண்டும். இங்கு பணியாற்றுகிறவர்கள் எல்லோரும் இந்த மனநிலையை முதியோர் மத்தியில் கொடுக்கத்தக்க விதமாக உழைக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

— மதி இளம்பரிதி —

## அன்பு....

(4ஆம் பக்கத்தொடர்ச்சி)

நண்பர்களையும் கூட்டுச் சேர்த்து 1831ஆம் ஆண்டு தருமசபையை (Conference of charity) தாபித்தார்.

அன்பு என்பது அநேக வேத சாட்சிகளையும் எண்ணற்ற வின்சன் டீ பவுல்களையும் உருவாக்கும் சக்தி கொண்டது.

## O. L. R திருவிழா

30.8.97 முதல் 8.9.97 வரை நடைபெறும். திருநாள் திருப்பலி பழைய நேரப்படி காலை 5.30 மணிக்கும், திருநாள் கூட்டுத்திருப்பலி 6.30 மணிக்கும் இடம்பெறும். மறையுரைகளை அருள்திரு. எட்வின் வசந்தராஜா o.m.i அடிகளார் வழங்குவார்.

## வன்னியில் உறுதிப்பூசுதல் விழா

இரணைமாதா நகர், நாச்சிக்குடா ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களும், இடம் பெயர்ந்தவர்களுமாக 295, சிறுவர்களுக்கு 13-8-97 இல் யாழ். ஆயர் உறுதிப்பூசுதல் திருவருட் சாதனத்தை வழங்கினார். அருள்திரு பயஸ், அருள்திரு செலஸ்ரின், அருள் திரு அற்புதராஜ், அருள்திரு ஸ்ரனி ஆகியோர் பங்குத் தந்தை ஞானராஜ் அடிகளுடன் இணைந்து இவ்வுறுதிப் பூசுதல் விழாவைச் சிறப்பித்தனர்.

புதிதாக அமைக்கப்பட்ட திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் 150 சிறார்களுக்கு 20.08-97இல் யாழ். ஆயர் உறுதிப் பூசுதல் திருவருட்சாதனத்தை வழங்கினார். அருள்திரு பயஸ் அருள்திரு தவராஜசிங்கம், அருள்திரு றெக்ஸ் சவுந்தரா ஆகியோர் ஞானராஜ் அடிகளுடன் இணைந்து இவ்விழாவை சிறப்பித்தனர்.

இப்பத்திகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1997 ஆம் ஆண்டுசெப்ரெம்பர் 2 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல190